

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.5.2025) திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகையில், திருச்சி பத்திரிகையாளர்கள் சங்கத்தின் (Tiruchi Press Club) புதிய நிருவாகிகளான தலைவர் சி. ஜெய்சங்கர், துணைத் தலைவர்கள் சகாய ஜெயராஜ், கே. கணேசன், செயலாளர் ராஜ்குமார், பொருளாளர் குணசேகரன், செயற்குழு உறுப்பினர் எம்.ஆர்.விஜய கோபால் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.5.2025) பள்ளிக் கல்வித் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள அரசு மாதிரிப் பள்ளிக்கான புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, தமிழ்நாட்டில் உள்ள அரசு மாதிரிப் பள்ளிகளில் பயின்று, மாநிலத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனமான தேசிய தொழில்நுட்ப கழகம் (National Institutes of Technology) போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பயின்றுவரும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.



திருச்சி வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் உள்ளிட்ட கழக முன்னணியினர் உடனிருந்தனர்.




தேனி வடக்கு மாவட்டம் போடியில் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நகரச் செயலாளர் புருஷோத்தமன் தலைமையில் நடைபெற்றது. கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியில் உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல்.மூக்கையா, மாவட்ட நிர்வாகிகள் மாநில நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று (9.5.2025) திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பஹல்காம் பகுதியில் நடந்த தீவிரவாத தாக்குதல் சம்பவத்தினாலும், பாகிஸ்தான் இராணுவத்தின் குண்டு வீச்சினாலும் இறந்த அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், இந்திய இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் இவ்விழாவில் கலந்துகொண்ட அனைவரும் அமைதியாக ஒரு நிமிடம் எழுந்து நின்று வீர வணக்கம் செலுத்தினார்கள்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (8.5.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர்மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, டி.வி.எஸ். டோல்கேட் முதல் கரூர் பைபாஸ் சாலை வரையில், பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.5.2025) பள்ளிக் கல்வித் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக்கான புதிய கட்டடத்தை திறந்து வைத்து, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தென்காசி தெற்கு மற்றும் தேனி தெற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 10.05.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | தென்காசி தெற்கு | கோல்டன் ஹால், 23, எல்.எஸ்.கட்டடம் (ஆனைமலை டொயோட்டாவுக்கு எதிரே), பிரதான சாலை, எல்.எஸ்.நகர், குத்துக்கல்வலசை. |
| 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | தேனி தெற்கு | அழகர் திருமண மண்டபம், தேனி – மதுரை ரோடு, கொண்டம நாயக்கன்பட்டி, ஆண்டிப்பட்டி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 06-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி